සියලු ම හිමිකම් ඇවිරිණි]
[முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் /
Department of Examinations, Sri Lanka

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2015 (2016)**

Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Teacher Educators' Service - 2015 (2016)

**(02) கிரகித்தலும் விடய ஆய்வும்**
Comprehension and Case Study

**இரண்டு மணித்தியாலங்கள்**
Two hours

| பகுதி | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| I | 1 | |
| | 2 | |
| | 3 | |
| II | 4 (i) | |
| | 4 (ii) | |
| | 4 (iii) | |
| மொத்தம் | | |
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | | |
| புள்ளிகளைப் பதிந்தவர் | | |

- **எல்லா** வினாக்களுக்கும் **இத்தாளிலேயே** விடையளிக்குக.

சுட்டெண் : ..........................

## பகுதி I - கிரகித்தல்

**1.** பின்வரும் தலைப்புகளில் **ஒன்றைத்** தெரிவு செய்து **300** சொற்கள் அளவிலான பகுப்பாய்வு கட்டுரை எழுதுக.

(i) அறிவும், நல்லொழுக்கப் பண்புகளும் நிறைந்த மாணவர் பரம்பரையை உருவாக்குவதில் பாடசாலை ஆசிரியரின் வகிபாகம்

(ii) இலங்கையில் மும்மொழிக் கல்வியை அடிப்படையாகக் கொண்டு கல்வியை விருத்தி செய்வதின் பொருத்தப்பாடு

(iii) பாடசாலைக் கல்விக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய தொழினுட்ப உபகரணங்களினால் மாணவர் அடையும் நன்மைகள்

(iv) மனித நடத்தைக்கோல விருத்தியில் இலக்கியம், இசை ஆகிய கலை ஊடகங்களின் பங்களிப்பு

(v) மனித சமுதாயத்திற்கு அச்சுறுத்தலான போதைப் பொருள் வர்த்தகத்தை உலகிலிருந்து அழித்தொழிக்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்

............................................................................................................
............................................................................................................
............................................................................................................
............................................................................................................
............................................................................................................
............................................................................................................
............................................................................................................
............................................................................................................
............................................................................................................
............................................................................................................
............................................................................................................
............................................................................................................
............................................................................................................
............................................................................................................
............................................................................................................
............................................................................................................



Department of Examinations, Sri Lanka

Department of Examinations, Sri Lanka

Department of Examinations, Sri Lanka

[பக் 3 ஐப் பார்க்க.

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE

(30 புள்ளிகள்)

**2.** பின்வரும் ஒவ்வொரு உரைப் பகுதியினதும் கருத்தை ஒரு **தனி வாக்கியத்தில்** எழுதி, **தடித்த எழுத்துக்களில்** உள்ள பதங்களை விளக்குக.

(i) ஆயுதங்கள் பரவுதலை நிறுத்துதலும் பாரிய அனர்த்தங்களை ஏற்படுத்தும் ஆயுதங்களைக் குறைத்து இறுதியாக இல்லாதொழிப்பதும் ஐக்கிய நாடுகளின் பாரிய குறிக்கோள்கள் ஆகும். ஆயுதக் குறைப்புப் பேச்சுவார்த்தைகள், சிபாரிசுகள், கற்கைகளை ஆரம்பித்தல் ஆகியவற்றைத் **தொடர்ந்து முன்னெடுக்கும் மன்றமொன்றாக ஐக்கிய நாடுகள் அமைப்பு** காணப்படுகிறது. ஐக்கிய நாடுகள், ஆயுதபலக்குறைப்பு மீதான மாநாட்டிலும் ஏனைய சர்வதேச அமைப்புக்களிலும் பல்தரப்பு பேச்சவார்த்தைகளுக்கு ஆதரவளிக்கின்றது. இந்தப் பேச்சுவார்த்தைகள், அணுப்பெருக்கம்சாரா பொருத்தனை, பரந்த அணுப் பரிசோதனை தடைப் பொருத்தனை மற்றும் அணு அல்லாத வலயங்களைத் தாபிக்கின்ற பொருத்தனைகள் போன்ற அத்தகைய உடன்படிக்கைகளை உருவாக்கியுள்ளது.

(ii) சிறுநீரக நோயின் காரணமாக ஏற்படும் வருமான இழப்புக்கள் முழுக் குடும்பத்தினதும் சமூக, பொருளாதார, நிலைமைகளை கடுமையாகப் பாதிக்கிறது. அனைத்தையுமுள்ளடக்கிய முறையான சமூக ஆதரவு முறைமை எதனையும் இலங்கை போதுமான அளவில் கொண்டிராததமையினால் நோய்களிலிருந்தான உற்பத்தித்திறன் இழப்புக்கள், வைத்திய ஆலோசனைகள், மருந்துகள், **இரத்த மாற்றுச் சிகிச்சைகள் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைகள்** என்பனவற்றின் நியதிகளில் நலக் கவனிப்புச் செலவுகள் ஏற்படும். இது குடும்பத்தையும் பொருளாதார ரீதியான உறுதியற்றதொரு நிலைக்குத் தள்ளிவிடுகிறது.

[பக் 4 ஐப் பார்க்க.

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

(iii) **காடழித்தல் காட்டின் சீரழிவு** ஆகியவற்றினால் எழும் காபன் வெளியிடல்களைக் குறைப்பது தொடர்பான ஐக்கிய நாடுகள் நிகழ்ச்சித்திட்டமானது காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளைக் குறைப்பதை நோக்காகக் கொண்டது. இலங்கையில் காடழித்தல் மற்றும் காட்டின் சீரழிவு தொடர்பான முக்கிய காரணிகளைத் தீர்மானித்தல் முக்கியமானதாகும். இதுபற்றிய ஆரம்ப ஆய்வுப் பணிகள் ஆராய்ச்சிப் பணிகள் என்பன நடத்தப்பட்டுள்ளன.

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

(iv) **தொழில்சார் மற்றும் தொழில்நுட்பத்துறைகளில்** உயர் பண்புத்தரமுடைய அரச துறைசாரா கல்வி நிறுவனங்களை நிறுவுவது முக்கியமானதாகும். தொழில்சார் கல்வி என்பது விருந்தோம்பல், தாதியியல், இயந்திரவியல், குழாய் வேலை, தச்சுத் தொழில், மருந்தாக்கல் மற்றும் கணிய அளவீடு போன்ற தொழில்சார் துறைகளில் மாணவர்கள் வேலை செய்வதற்கு தயார்படுத்தும். ஆகவே, உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் வளர்ந்துவரும் சந்தை மற்றும் தொழிற்துறைத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கான ஒரு தகுதிபெற்ற தேர்ச்சித்திறமையுடைய தொழிற்படையை இந்நிறுவனங்கள் உருவாக்கலாம்.

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

*(05 × 4 = 20 புள்ளிகள்)*

**3.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் சாராம்சத்தை **மூன்றிலொன்றாகச்** சுருக்கி எழுதி பொருத்தமான **தலைப்பினையும்** இடுக. சுருக்கத்தின் இறுதியில் நீங்கள் பயன்படுத்திய **சொற்களின் எண்ணிக்கையைக்** குறிப்பிடுக.

பொருத்தமான அறிவினையும் தேரச்சியையும் கொண்டுள்ள உற்பத்தியாண்மை மிக்க தொழிற்படையினை உருவாக்குவதில் கல்வி முறை முக்கியமான பங்கொன்றினை ஆற்றுகின்றது. தொழிலாளர் சந்தையின் மாற்றமடைந்து வரும் தேவையினை ஈடுசெய்யக்கூடிய இயக்கவாற்றல் வாய்ந்த கல்வித்துறையின் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கின்ற விதத்தில் அரசாங்கத்தினால் தொடர்ச்சியாகப் பல்வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு செய்யும் பொழுது இயலளவைப் பலப்படுத்தல், தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் முதலாந்தர, இரண்டாந்தர மற்றும் உயர் கல்வித் துறைகளுடன் தொடர்பான விடயங்கள் அடையாளம் காணப்பட்டன. அதேநேரம் அறிவு இடைவெளியினை நிரப்பவதற்காகத் தொழினுட்ப மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துவதற்கான தேவையும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கல்வித்துறையினை மீள வடிவமைக்கையில் பொதுவாக கல்விக் கொள்கையானது செலாவணி மற்றும் நாட்டின் பொருளாதாரக் கொள்கை என்பனவற்றுடன் நெருக்கமாக இணைக்கப்படுதல் வேண்டும்.

இலங்கை அறிவு மையமாகத் தோற்றம் பெறுவதற்கு அவசியமான மனித மூலதன அடித்தளத்தினை உருவாக்குவதற்கு பொதுக் கல்வி முறைக்கு தற்பொழுது கணிசமான நவீன மயப்படுத்தல்கள் தேவைப்படுவது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. கல்விக் கொள்கையை மீள வடிவமைக்கும் நோக்குடன் புதிய கல்விச் சட்டமொன்றை வரைவதற்கான நடவடிக்கைகள்

[பக் 5 ஐப் பார்க்க.

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE

முன்னெடுக்கப்பட்டுள்ளன. இப்புதிய சட்டவாக்கம் பொதுக் கல்வியை வரவேற்பதுடன் விரைவுபடுத்தப்பட்டதும் விரும்பத்தக்கதுமான தரமான கல்வி அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் அதேசமயம், பரீட்சை சார்ந்த அதனை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தினை நோக்கி நகர்கின்ற பொதுக் கல்வி முறையொன்றிற்கான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கும் கல்வியில் ஆங்கிலத்தையும் தகவல் தொழினுட்பத்தினையும் மேம்படுத்தி பிள்ளைகளின் வாழ்க்கைத் தேர்ச்சியை பெற்று கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை விரைவான வளர்ச்சியைப் பெற்றுக்கொள்ளும் நிலையில் இருப்பதனாலும் அதன் மூலம் நடுத்தர வருமான நிலைக்கு நகர்ந்துள்ளமையினாலும் "அறிவுப் பொருளாதாரம்" சார்ந்த உபாயங்களை வலுவான முறையில் வடிவமைத்து தேசிய மட்டத்தில் பொருத்தமான துறைகளைச் சீர்திருத்த வேண்டியதுமான தேவை நாட்டிற்குக் காணப்படுகின்றது. இதுவரை அடையப்பட்ட முன்னேற்றம் மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படுவதனால் தகவல் தொடர்பூட்டல் தொழினுட்பம், புத்தாக்கம் மற்றும் பொருளாதார ஊக்குவிப்பு அமைப்பு போன்ற துறைகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவது முக்கியமானதாகும்.

*(20 புள்ளிகள்)*

Department of Examinations, Sri Lanka

**பகுதி II - விடயஆய்வு**

4. கீழே தரப்பட்டுள்ள சம்பவத்தை/சந்தர்ப்பத்தை வாசித்து, அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

இராஜபுரம் தேசிய ஆசிரியர் கல்விக்கல்லூரி இற்றைக்கு 10 வருடங்களுக்கு முன்னர் ஆசிரியர் கல்லூரி ஒன்றின் இடத்தில் நிறுவப்பட்ட கல்விக் கல்லூரியாகும் ஆசிரியர் கல்லூரி அமைந்திருந்த கட்டிடங்களைப் புனரமைத்து கல்விக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆசிரியர் கல்லூரியில் இருந்த தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுக்கு மேலதிகமாக 10 கணினிகளும் மற்றும் அதற்குத் தேவையான பாகங்களும் அச்சந்தர்ப்பத்திலே கல்விக் கல்லூரிக்கு வழங்கப்பட்டன. இதன்பின்னர் கடந்த 10 வருட காலத்தில் மூலதனப் பொருட்கள் எதுவும் கல்விக் கல்லூரிக்கு வழங்கப்படாததுடன் சிறு திருத்த நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் வருடாந்த நிதியினைத் தவிர வேறெந்த நிதி ஏற்பாடுகளும் கட்டிடத் திருத்த வேலைகளுக்காக வழங்கப்படவில்லை.

தற்போது இந்தக் கல்விக்கல்லூரிக்கு ஆரம்ப கல்வி, மொழிக்கற்கை, சமூகக்கல்வி போன்ற துறைகளின் பாடநெறிகளுக்காக வருடமொன்றிற்கு 150 புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இன்றுவரைக்கும் பீடாதிபதி பழைய ஆசிரியர் கல்லூரியின் அதிபர் வசித்துவந்த விடுதியில் வசித்து வருவதுடன் மாணவர் விடுதியில் உள்ள சில அறைகளில் விரிவுரையாளர்கள் சிலர் தனியாக வசித்து வருகிறார்கள். ஏனைய விரிவுரையாளர்களும் கல்விசாரா அலுவலர்களும் அருகிலுள்ள கிராமவாசிகளின் வீடுகளில் வாடகைக்கு வசித்து வருபவர்களாகவோ அல்லது தமது வீடுகளில் இருந்து பொதுப் போக்குவரத்து சேவைகளில் வருகை தருபவர்களாகவோ உள்ளனர். இதனால் அவர்களில் பலர் தாமதமாகி கடமைகளுக்கு வருவதுடன் விரைவாக வீடு செல்வதற்கும் முயற்சிக்கின்றனர். இக்காரணத்தினால் கல்விக் கல்லூரிகளின் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரும் அதன் பின்னருமான மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் மேற்பார்வை மற்றும் ஏற்படும் ஒழுக்காற்றுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் பொறுப்பு பீடாதிபதியிடமும் மற்றும் விடுதிகளில் தங்கியுள்ள விரிவுரையாளர்கள் சிலரிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவர்களும் இந்த நடவடிக்கைகளில் அக்கறையின்றியே ஈடுபட்டனர்.

விடுதிகளில் காணப்படுகின்ற அதிக இடநெருக்கடியின் காரணமாக விரிவுரை நடைபெறும் கால எல்லையின் பின்னர் மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விரிவுரை மண்டபத்தைப் பயன்படுத்தினர். எனினும் அடிக்கடி ஏற்படும் மின்தடங்கல் அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக இருந்தது. எல்லா மாணவர்களும் ஒன்று சேரக்கூடிய மகாநாட்டு மண்டபமும் கல்விக் கல்லூரியில் இருக்கவில்லை. நீர் வழங்கல் சபையின் மூலம் விடுதிகளுக்கு குழாய் நீர் வசதிகள் இருப்பினும் காலையில் மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளுக்குத் தயாராகும் போது நீர்வழங்கல் மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படும். இதனால் குளிப்பதற்கும் ஆடைகளைக் கழுவிக் கொள்வதற்கும் அவர்கள் அருகிலுள்ள தோட்டத்தில் உள்ள கிணற்றடிக்கு செல்ல நேரிட்டது. மலசலகூடங்களோ கழிவறைகளோ போதிய எண்ணிக்கையில் இல்லாமையினால் மாணவர்கள் உரிய நேரத்திற்கு கல்வி நடவடிக்கைகளுக்காக தயாராவதற்கு பாதிப்பாக இருந்தது. விடுதிகளில் உள்ள மாணவர்களுக்குத் தேவையான உணவுகள் அரைகுறையாகக் கட்டப்பட்ட கட்டிடமொன்றிலேயே சமைக்கப்பட்டன. அங்கு எரிவாயு அடுப்பு இருப்பினும் சகல உணவுகளையும் சமைப்பதற்குப் போதுமானதாக இல்லாததினால் பிரதான உணவைச் சமைப்பதற்கு விறகு அடுப்பே பயன்படுத்தப்பட்டது.

கல்விக் கல்லூரியில் உள்ள கணினிகள் பலவும் செயற்படாத நிலையில் இருந்ததுடன் பல்லூடக எறியங்கள், மின் ஒளிப்படப் பிரதி உபகரணம் மற்றும் இணைய வசதிகள் என்பன இதுவரை வழங்கப்படவில்லை. நூலகத்தில் பழைய புத்தகங்கள் பெரும் எண்ணிக்கையில் இருந்ததுடன் அவற்றை வைப்பதற்குரிய இடவசதிகள் போதுமானதாக இருக்கவில்லை. அவ்வாறே அங்கு புத்தகங்களின் பெயர்களை ஒழுங்கமைத்தல் மற்றும் இற்றைப்படுத்தல் என்பன கைகளினாலேயே செய்யப்பட்டன. விளையாட்டு மைதானத்திற்காக இரண்டு ஏக்கர் அளவிலான சமதரையான இடமொன்று இருந்தபோதும் அங்கு விளையாட்டுக்குத் தேவையான ஏனைய வசதிகள் இருக்கவில்லை. கல்விக்

[பக் 7 ஐப் பார்க்க.

Department of Examinations, Sri Lanka

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE

கல்லூரியைச் சுற்றி அமைக்கப்பட்ட கம்பி வேலியானது உரிய முறையில் பராமரிக்கப்படாமையினால் அயலிலுள்ள வீடுகளில் உள்ள மாடுகளினாலும் மாடுகளைக் கொண்டுவரும் உரிமையாளர்களினாலும் கல்விக்கல்லூரி வளவினுள் நடப்பட்டுள்ள மரக்கறிகள், பழங்கள், பூமரங்கள் ஆகியவற்றுக்கு தொடர்ச்சியாக சேதம் ஏற்படுத்தப்பட்டது. அவ்வாறே அயல்கிராமத்தில் வசிக்கும் ஒழுக்கப் பண்பில்லாத இளைஞர்கள் கல்லூரி வளவினுள்ளே நுழைந்து விரும்பத்தகாத செயல்களிலும் திருட்டிலும் ஈடுபட்ட சந்தர்ப்பங்களும் இடம்பெற்றுள்ளன.

கல்விக் கல்லூரியில் உள்ள இவ்வாறான வசதியின்மைகள் குறைபாடுகள் பற்றி நிருவாகத்தினரும் மாணவர்களும் தொடர்ச்சியாக உரிய அதிகாரிகளுக்கு விடயங்களை முன்வைத்திருந்தனர். அதன் பெறுபேறாக அடுத்த வருடத்தில் கல்விக் கல்லூரியைப் புனரமைப்பதற்காக 10 மில்லியன் ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தப் பணத்தில் செய்யக்கூடியதென எதிர்பார்க்கப்படும் தேவைகளை உள்ளடக்கி மாதிரி மதிப்பீடொன்றுடன் கூடிய செயற்றிட்ட முன்மொழிவை விரைவாக முன்வைக்குமாறும் கல்விக்கல்லூரி ஆணையாளரினால் பீடாதிபதிக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்தது.

(i) அடுத்த வருடத்திற்காக இராஜபுரம் தேசிய ஆசிரியர் கல்விக் கல்லூரிக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் தேவைகள் தொடர்பாகத் தயாரிக்கப்படவுள்ள செயற்றிட்ட முன்மொழிவில் உள்ளடக்கப்படவேண்டுமென நீங்கள் கருதும் 10 செயற்றிட்டங்களை **முன்னுரிமை அடிப்படையில்** ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

*(10 புள்ளிகள்)*

(ii) அந்த செயற்றிட்ட முன்மொழிவுகளில் நீங்கள் முன்னுரிமை அடிப்படையில் குறிப்பிட்ட முதல் இரண்டு செயற்றிட்டங்களையும் அவ்வாறு தெரிவு செய்தமைக்கான காரணங்களை வெவ்வேறாக சுருக்கமாக விளக்குக.

(அ) ..........................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

[பக் 8 ஐப் பார்க்க.

Department of Examinations, Sri Lanka

(ஆ) ..................................................................................................
..................................................................................................
..................................................................................................
..................................................................................................
..................................................................................................
..................................................................................................
..................................................................................................
..................................................................................................
..................................................................................................
..................................................................................................

*(05 × 2 = 10 புள்ளிகள்)*

(iii) நீங்கள் குறிப்பிட்ட அந்த செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதால் கல்விக்கல்லூரியினது பண்புத்தரக் கல்வி அபிவிருத்தியில் அவற்றின் பங்களிப்பு எவ்வாறானது என்பதைச் சுருக்கமாக விளக்குக.

..................................................................................................
..................................................................................................
..................................................................................................
..................................................................................................
..................................................................................................
..................................................................................................
..................................................................................................
..................................................................................................
..................................................................................................
..................................................................................................

*(10 புள்ளிகள்)*

❋ ❋ ❋

Department of Examinations, Sri Lanka

Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளும்**
**திறந்த போட்டிப் பரீட்சை - 2015 (2016)**

Open Competitive Examination for Recruitment to Grade III of the
Sri Lanka Teacher Educators' Service - 2015 (2016)

**(03) கல்வி மூல தத்துவங்கள்**
Elements in Education

ஒரு மணித்தியாலம்
One hour

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

**மிக முக்கியம் :**

**விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**



✳ **விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.**

**1 2 3 4**

**உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் பக்கத்திலும் எழுதுக.**

.......................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................
நோக்குநரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம்:**

✳ இவ்வினாத்தாள் **07** பக்கங்களில் **50** வினாக்களைக் கொண்டுள்ளது.

✳ விடைகளை எழுதமுன் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.

✳ **எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.

✳ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **ஒரு மணித்தியாலம்** ஆகும்.

✳ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

✳ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

✳ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்

✳ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

✳ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றமாகும்.

✳ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 9 | |
| 3 | 10 - 17 | |
| 4 | 18 - 24 | |
| 5 | 25 - 32 | |
| 6 | 33 - 43 | |
| 7 | 44 - 50 | |
| மொத்தம் | | |

**இறுதிப் புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |



Department of Examinations, Sri Lanka

● **1** தொடக்கம் **30** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான விடையை** தெரிவு செய்து அதற்குரிய விடையின் **இலக்கத்தை** எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

1. பிளேட்டோவினால் முன்வைக்கப்பட்ட கல்வித் தத்துவத்தின் முக்கிய இலக்கு யாது?
   (1) நியாயமானதும் நீதியானதுமான ஒழுக்கப்பண்புமுள்ள சமூகத்தை உருவாக்குதல்
   (2) சமநிலை ஆளுமை கொண்ட நபர்களை உருவாக்குதல்
   (3) சிறந்த பொறுப்புள்ள குடிமகனை உருவாக்குதல்
   (4) வளங்களை நியாயமாகவும் சமமாகவும் பகிர்ந்து கொள்ளல் (.........)

2. "எமிலுக்கு தெரிந்தது சிறிதளவே. ஆனால் அவருக்குத் தெரிந்தது அவருக்குச் சொந்தமானதே. அத்துடன் அவற்றை அவர் நன்கு அறிந்துள்ளார் " என்னும் சிறுவர் கல்வித்துறைக்கு முக்கியமாக அமைந்த கருத்தை முன்வைத்த தத்துவஞானி யார்?
   (1) ஜோன் டூயி (2) பிளேட்டோ
   (3) ஜீன் ஜாக்ஸ் ரூசோ (4) மகாத்மா காந்தி (.........)

3. பின்வருவனவற்றுள் ஜோன் டூயியின் தத்துவம் எந்தக் கல்விச் சிந்தனையில் அடங்கும்?
   (1) இலட்சிய வாதம் (2) இயற்கை வாதம்
   (3) இருப்பியல் வாதம் (4) பயன்பாட்டு வாதம் (.........)

4. பின்வருவனவற்றுள் பாடசாலைச் செயன்முறைகளைத் திட்டமிடும்போது கல்வி நோக்கங்கள், குறிக்கோள்கள் என்பன மிகப் பயனுடையவையாக அமையும் சந்தர்ப்பம் எது?
   (1) பௌதிக வளங்களை வினைத்திறனாகத் திட்டமிடல்
   (2) நோக்கு, பணி கூற்றுக்களை உருவாக்குதல்
   (3) தேவையான மனித வளங்களைத் தீர்மானித்தல்
   (4) வருடாந்த நேரசூசிகளைத் தயாரித்தல் (.........)

5. சமூக அளவியற் சோதனை முறையினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடு யாது?
   (1) நபரொருவர் பிறிதொரு நபர்மீது கொண்டுள்ள விருப்பத்தின் அளவை அளவிடல்
   (2) சமூகக் குழுவொன்றுக்கும் பிறிதொரு குழுவுக்கும் இடையிலான தொடர்பை அளவிடல்
   (3) சமூக அளவியல் வரைபுக்குத் தேவையான திட்டத்தை உருவாக்கல்
   (4) தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கும் சமூக நட்சத்திரங்களுக்கும் இடையிலான தொடர்பை வெளிப்படுத்தல் (.........)

6. கீழ்மட்ட சமூகக் குழுக்களின் உப கலாசாரத்தில் முக்கியமான கூறுகள் இல்லாமை அந்த குழுக்களின் பிள்ளைகளின் கல்வியில் தடையை ஏற்படுத்தும் என்பதைக் கண்டுபிடித்த கொள்கை யாது?
   (1) இடை ஊடாட்டக் கொள்கை (2) கலாசார வறுமைக் கொள்கை
   (3) களக் கொள்கை (4) கலாசார மூலதனக் கொள்கை (.........)

7. தற்போதுள்ள கல்வி நிறுவனமொன்றில் செயற்படும் சமூக குழுக்களை அறிமுகஞ் செய்ய மிகப் பொருத்தமான வகைப்படுத்தல் யாது?
   (1) கிடைக் குழுக்களும் நிலைக்குத்துக் குழுக்களும்
   (2) சிறிய குழுக்களும் பெரிய குழுக்களும்
   (3) உள்வாரி குழுக்களும் வெளிவாரி குழுக்களும்
   (4) முறைசார் குழுக்களும் முறைசாரா குழுக்களும் (.........)

8. பின்வருவனவற்றுள் சமூகமாற்றத்துக்கும் கல்விக்கும் இடையிலான தொடர்பை சரியாக எடுத்துரைக்கும் கூற்று எது?
   (1) சமூக மாற்றங்களைக் கருத்திற் கொண்டு கல்வியில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்
   (2) சமூக நிலைமாற்றத்துக்கு கல்வி முன்னோடியாக விளங்க வேண்டும்
   (3) சமூக மாற்றம் காரணமாக கல்வியிலும் கல்வியின் காரணமாக சமூகத்திலும் மாற்றம் ஏற்படவேண்டும்
   (4) சமூக மாற்றம், கல்வி மாற்றம் ஆகியன நாட்டில் இடம்பெறவேண்டும் (.........)

9. தற்கால ஆசிரியர் வகிபாகத்தில் மாணவர் தேவை, ஆற்றல்கள், விருப்பு ஆகியவற்றின் அடிப்படையில் கற்றலை மேற்கொள்ள வழிப்படுத்தும் எண்ணக்கருவை அறிமுகப்படுத்தப் பயன்படுத்தப்படும் பெயர் யாது?
   (1) ஊடுகடத்தல் வகிபாகம் (2) நிலைமாற்று வகிபாகம்
   (3) பரிமாறல் வகிபாகம் (4) முகாமைத்துவ வகிபாகம் (.........)

[பக் 3 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE



10. பின்வருவனவற்றுள் ஆசிரியர் வகிபாகம் தொடர்பான முரண்பாடுகளுக்குக் காரணமாக **அமையாதது** யாது?
   (1) வகிபாகத் தொகுதிக்குரியவர்களின் எதிர்பார்ப்புகள் சமமாக அமையாமை
   (2) வகிபாக நடத்தைகள் நபர்களுக்கமைவாகவும் சந்தர்ப்பத்துக்கு ஏற்பவும் வேறுபடல்
   (3) வகிபாகத்தில் செல்வாக்குச் செலுத்துவோருடன் ஒழுங்குமுறையில் செயற்படல்
   (4) ஆசிரியர் பல வகிபாகங்களை ஏற்று செயற்பட வேண்டி ஏற்படல் (.........)

11. பின்வருவனவற்றுள் ஏனைய தொழில்களுடன் ஒப்பிடுகையில் ஆசிரியர் வகிபாகத்தில் நிலவும் மிகப் பெரிய வேறுபாடு எது?
   (1) அதிக பொறுப்புகளையும் மற்றும் அதிகாரங்களையும் கொண்டிருத்தல்
   (2) உயிர்ப்புள்ள குழுவினருடன் பெருமளவில் செயற்பட வேண்டி ஏற்படல்
   (3) உரிமைகளை விட சேவையென்ற வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளல்
   (4) தொழில்ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ள பூரண சுதந்திரம் காணப்படல் (.........)

12. பின்வரும் நடவடிக்கைகளில் ஆசிரியர் வகிபாகத்துக்கு **உரித்தல்லாத** நடவடிக்கை யாது?
   (1) பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் பதவியை வகித்தல்
   (2) பாடம் தொடர்பான மேலதிக நூல்களை வாசிக்க அதிக நேரத்தைச் செலவிடல்
   (3) ஞாயிற்றுக்கிழமைகளில் சமய பாடசாலைகளில் சமய பாடங்களைக் கற்பித்தல்
   (4) மாலை நேரங்களில் மாணவர்களது வீடுகளுக்குச் சென்று கற்பித்தல் (.........)

13. யுனெஸ்கோவின் கல்விக் கொள்கை **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது?
   (1) கல்வி பொதுமக்களின் விருப்பின் அடிப்படையில் நடைபெற வேண்டிய சேவையாக இருத்தல் வேண்டும்
   (2) நாட்டின் கல்விக்குத் தேவையான பாடசாலைச் சேவைகளை இலவசமாக வழங்க வேண்டும்.
   (3) அரச பாடசாலைகளைத் தவிர ஏனைய நிறுவனங்களுக்கு மாணவர்களை கல்விக்காக அனுப்புவதை நிறுத்த வேண்டும்.
   (4) பெற்றோரது சுதந்திரத்துக்கு தடை ஏற்படாதவாறு வசதி குறைந்த மாணவர்களுக்கு உதவி வழங்குதல் வேண்டும் (.........)

14. கல்வியில் சமவாய்ப்பு வழங்கும் கொள்கையை வெற்றிபெறச் செய்வதற்கு நியாயபூர்வமாக நடைபெற வேண்டுமென ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் பின்வருவனவற்றுள் எது?
   (1) கல்விக்குள் பிரவேசித்தல், தொடர்ந்து இருத்தல், கல்வி அடைவு, கல்வி அனுகூலங்கள்
   (2) கல்விக்குள் பிரவேசித்தல், தொடர்ந்து இருத்தல், கல்வியைத் தெரிவுசெய்தல், கல்வியில் சித்தி பெறுதல்
   (3) தாய்மொழியில் கற்றல், பாடசாலைக்குள் பிரவேசித்தல், பாடத்துறையைத் தெரிவு செய்தல், கல்விப் பேறுகள்
   (4) முன்பள்ளிக் கல்வி, ஆரம்ப வகுப்பில் அனுமதி, இடைநிலைக் கல்வி, உயர்கல்வி (.........)

15. இலங்கையின் கல்வி மேம்பாட்டை வெளிப்படுத்தும் நியதி **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது?
   (1) மாணவர் பாடசாலையில் இருக்கும் வருடங்களின் சராசரி அதிக பெறுமானத்தை கொண்டிருத்தல்
   (2) ஆசிரியர் மாணவர் விகிதம் 1 : 17 ஆகக் காணப்படல்
   (3) வயதுவந்தவரின் எழுத்தறிவு சதவீதம் 98.1% ஆகக் காணப்படல்
   (4) சில பாடசாலைகளுக்கான கேள்வி உயர்மட்டத்தில் நிலவுதல் (.........)

16. பின்வருவனவற்றுள் நாட்டின் கல்வியைத் திட்டமிடும்போது யுனெஸ்கோ சிபாரிசுகளுக்கு **உடன்படாத** நடவடிக்கையாக அமைவது எது?
   (1) நாட்டின் வளங்கள் மற்றும் தேவைகளுக்கு ஏற்புடையதாகக் கல்வியைத் திட்டமிடல்
   (2) குறுங்காலத் திட்டங்கள் அன்றி நீண்டகாலத் திட்டங்களே தேவைப்படல்
   (3) கல்வியில் தொகைரீதியாக மட்டுமின்றி தரரீதியானதுமான அபிவிருத்தியையும் திட்டமிடல்
   (4) தாய்மொழி மூலம் கற்பிக்ககூடிய ஆசிரியர்களை உருவாக்குதல் (.........)

17. பின்வருவனவற்றுள் திட்டமிடல், முகாமைத்துவம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பை வெளிப்படுத்தும் கூற்று எது?
   (1) மட்டுப்படுத்தப்பட்ட வளங்களிலிருந்து உச்ச பயன் பெறுவதற்குத் திட்டமிடலை விட முகாமைத்துவத்துவமே முக்கியமானது
   (2) திட்டமிடலின் முன்னர் முகாமைத்துவம் இடம்பெறல்வேண்டும்
   (3) இச்செயன்முறைகள் இரண்டும் ஒன்றிலிருந்தொன்று ஊட்டம் பெறுவனவாகும்
   (4) வினைத்திறன் முகாமைத்துவத்துக்கும் விளைதிறன் திட்டமிடலுக்கும் தேவையாகும் (.........)

[பக் 4 ஐப் பார்க்க.

Department of Examinations, Sri Lanka

18. 2005/24 இலக்க சுற்றுநிருபத்துக்மைய பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலை முகாமைத்துவம் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள நிறுவப்படவுள்ள **இரண்டு** குழுக்களும் எவை?
    (1) பாடசாலை அபிவிருத்திக் குழு, பாடசாலை முகாமைத்துவக் குழு
    (2) பாடசாலை முகாமைத்துவக் குழு, மேற்பார்வைக் குழு
    (3) பாடசாலைமட்ட முகாமைத்துவக் குழு, பாடசாலை அபிவிருத்திச் சபை
    (4) பாடசாலைக் குழு, பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (.........)

19. பின்வருவனவற்றுள் கல்விசார் சோதனையொன்றின் தகுதியைக் கருத்திற் கொள்ளும்போது மிக முக்கியமாகக் கருதப்படும் விடயம் யாது?
    (1) வினாக்களுக்கான விடைகள், பக்கச்சார்பின்றி புள்ளியிடக்கூடுமானதா என்பது
    (2) உரிய பாடத்துறையிலுள்ள எல்லாத் தலைப்புகளும் உள்ளடங்கத்தக்க வகையில் சோதனை தயாரிக்கப்பட்டுள்ளதா என்பது
    (3) விடைத்தாளுக்கு வழங்கப்படும் புள்ளிகள் எவ்வளவிற்கு உரிய மட்டத்தைச் செம்மையாக எடுத்துரைக்கின்றன என்பது
    (4) பல்வேறு நுண்மதி ஆற்றல்களை அளவிடக் கூடிய வகையில் வினாக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பது (.........)

20. பின்வருவனவற்றுள் மாணவர் செயலாற்றுகை பற்றிய கணிப்பீட்டின்போது "உண்மையுடைமை (Authenticity)" எனக் கருதப்படுவது எந்த இயல்பாகும்?
    (1) நடைமுறை சாத்தியமான தன்மை
    (2) நம்பகமான முறையில் புள்ளிகளை வழங்கத்தக்க ஆற்றல்
    (3) கணிப்பீடு பாடசாலை மட்டத்திலானதாயிருத்தல்
    (4) நிஜ வாழ்க்கையுடன் பொருந்தியதாயிருத்தல் (.........)

21. புள்ளி மாற்றீட்டுக்கென பயன்படுத்தப்படும் Z புள்ளிகள் தொடர்பாக, பின்வரும் எந்தக் கூற்று உண்மையானதாகும்?
    (1) புள்ளிகளின் பரம்பல் கட்டாயம் செவ்வன் பரம்பலுக்கு இயைபுடையதாகவிருத்தல்.
    (2) நியதிசார் மதிப்பீட்டுக்குப் பயன்படுத்தக்கூடிய புள்ளியாகும்.
    (3) மாணவர் அடைவு மட்டத்தைத் தீர்மானிக்கப் பயன்படுத்தக்கூடிய புள்ளியாகும்.
    (4) $Z = 0$ என்பதனால் இடையம் எடுத்துரைக்கப்படும். (.........)

22. பின்வருவனவற்றுள் குழுமுறைச் செயற்பாடாகப் பாடத்தைக் கற்பிப்பதற்கென வகுப்பினை ஐந்து சிறு குழுக்களாகப் பிரிக்கப் பொருத்தமான முறை எது?
    (1) ஆசிரியரது விருப்பத்தின் அடிப்படையில் குழுக்களைப் பிரித்தல்
    (2) 1 இலிருந்து 5 வரை இலக்கங்களைக் கூறச்செய்து ஒரே இலக்கங்களைக் கூறியோரை ஒரே குழுக்களில் சேர்த்தல்
    (3) மாணவர்களின் நட்புறவு தொடர்புகளுக்கமைவாக குழுக்களாக்குதல்
    (4) வகுப்பறையிலுள்ள பௌதிக வளங்களுக்கு அமைய குழுக்களாகப் பிரித்தல் (.........)

23. பின்வருவனவற்றுள் ஏற்கனவே உள்ள தரவுகளுக்கு அப்பால் சென்று புதிய அணுகுமுறையை உருவாக்கப் பங்களிப்பு செய்யும் கற்றல் முறை யாது?
    (1) கண்டறிமுறை
    (2) நிரலித்த கற்றல் முறை
    (3) பிரச்சினைத் தீர்வு முறை
    (4) பாத்திரமேற்று நடித்தல் முறை (.........)

24. பின்வருவனவற்றுள் கற்றல் கற்பித்தல் பாங்கு தொடர்பான **பிழையான** கூற்று எது?
    (1) ஒரே தகைமைகள் கொண்ட ஆசிரியர்களிடத்தே வேறுபட்ட கற்பித்தல் பாங்குகள் காணப்படும்
    (2) ஆசிரியரது கற்பித்தல் பாங்கு மாணவரது கற்றல் பாங்குடன் பொருந்துவதாக இருத்தல் வேண்டும்.
    (3) ஒரே வகுப்பில் பல்வேறு வகைப்பட்ட கற்றல் பாங்குகள் கொண்ட மாணவர்கள் இருப்பர்.
    (4) கற்பித்தலுக்கு பல்வேறு கற்றல் பாங்குகள் தடையாக அமையமாட்டா. (.........)



Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE

25. பின்வருவனவற்றுள் "படம் ஒன்று நூறு வார்த்தைகளை விடப் பெறுமதியானது" எனும் பண்டைய சீனப் பழமொழியின் கல்வித் தொழினுட்பம் பற்றிய விடயத்தை சரியாக எடுத்துரைக்கும் கூற்று எது?
   (1) பார்வை மூலமாக பெறுமதிமிக்க செயற்பாடுகள் நடைபெறுவதனால் அதைப் பாதுகாக்க வேண்டும்
   (2) பாரப்பதினால் குறைந்த முயற்சியுடன் அதிக உறுதியான அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்
   (3) வாய்மொழி மூலம் பல்வேறு விடயங்களைக் கற்பிக்கலாம்
   (4) கருத்துநிலை அனுபவங்களைப் பெறுவதற்கு பார்வை மிகவும் பயனுடையது (.........)

26. கற்பித்தல் செயன்முறையில் எண்ணக்கருக்கள் தொடர்பாக சரியானதும் தெளிவானதுமான விளக்கத்தை பெறுவதற்கு மாதிரி ஒன்றிற்குரிய பின்வரும் எச்சிறப்பியல்பு காரணமாகும்?
   (1) பெரியதைச் சிறியதாக்கிக் காட்டுதல்
   (2) சிறியதைப் பெரிதாக்கிக் காட்டுதல்
   (3) முப்பரிமாண இயல்புகளைக் கொண்டிருத்தல்
   (4) அளவுத்திட்டத்துக்கமைய தயாரிக்கப்பட்டிருத்தல் (.........)

27. இலங்கையின் புராதன தலைநகரங்கள் அமைந்திருந்த இடங்கள் பற்றிக் கற்பிப்பதை இலகுபடுத்த "உருவும் பின்னணிப் புலக்காட்சியும்" எனும் உளவியல் கோட்பாட்டிற்கமைய தயாரிக்கப்பட்ட மிகச் சிறந்த வரைபடம் பின்வருவனவற்றுள் யாது?
   (1) இலங்கையின் தலைநகரங்கள் அமைந்திருந்த இடங்களைக் காட்டுவதாக வரையப்பட்ட பருமட்டான படம்
   (2) நூலகத்திலிருந்து பெறப்பட்ட அச்சடிக்கப்பட்ட பெரிய இலங்கைப் படம்
   (3) நகரங்கள், வரலாற்று இடங்கள், பௌதிக அமைவுகள், வளங்கள் ஆகியன அடங்கியதாக அளவுத்திட்டத்துக்கமைய தயாரிக்கப்பட்ட இலங்கைப் படம்
   (4) புராதன தலைநகரங்கள் மட்டும் குறித்துப் பெயரிடப்பட்ட முறையான இலங்கைப் படம் (.........)

28. பின்வருவனவற்றுள் வகுப்பறையில் உள்ள மாணவர்கள் சிலரின் எழுத்தறிவுப் பிரச்சினையைத் தீர்ப்பதனை நோக்காகக் கொண்டு அமுல்செய்யப்படும் ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்தக்கூடிய சிறந்த ஆராய்ச்சி அணுகுமுறை எது?
   (1) விவரண ஆராய்ச்சி (2) அனுபவ மூலமான ஆராய்ச்சி
   (3) செயல்வழி மூல ஆராய்ச்சி (4) மதிப்பீட்டுமூல ஆராய்ச்சி (.........)

29. ஆராய்ச்சி செய்யும்போது மேற்கொள்ளப்படும் 'முன்னோடிச் சோதனை' என்பதால் கருதப்படுவது யாது?
   (1) ஆராய்ச்சிக்குரிய உசாவுதல்களை மேற்கொள்ளும் நூலக ஆராய்ச்சியாகும்
   (2) ஆராய்ச்சிக் கருவியினை தகுதியுடைமையாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் சோதனை
   (3) ஆராய்ச்சி உதவியாளர்களை இலக்குக்கு வழிப்படுத்தும் சோதனை
   (4) அடைவுச் சோதனை மூலமாக கற்றலுக்கு இட்டுச் செல்லும் ஆராய்ச்சியாகும் (.........)

30. ஆராய்ச்சியொன்றின்போது உண்மையானதும் மிகச் சரியானதுமான தரவுத் தொகுதியைச் சேகரிக்க உகந்த அவதானிப்பு முறை யாது?
   (1) பங்கேற்புமுறை அவதானிப்பு (2) நேரடி அவதானிப்பு
   (3) முறைசார் அவதானிப்பு (4) மறைமுக அவதானிப்பு (.........)

● **31** தொடக்கம் **50** வரையான வினாக்களுக்கு சரியான விடைகளை **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

31. பென்ஜமின் எஸ் புளுமினால் சமர்ப்பிக்கப்பட்ட கல்வி நோக்கங்களின் வகைப்படுத்தலில் அடங்கும் பிரதான துறைகள் **மூன்றைப்** பெயரிடுக.

   (i) ........................................................................................................

   (ii) ........................................................................................................

   (iii) ........................................................................................................

32. கல்வியை மையமாக கொண்ட சமூகத்தினை உருவாக்க, முறைசார் கல்வித் துறையுடன் சீர்திருத்தப்பட வேண்டிய ஏனைய கல்வித் துறைகள் **இரண்டைப்** பெயரிடுக.

   (i) ........................................................................................................

   (ii) ........................................................................................................



Department of Examinations, Sri Lanka

33. கலாசாரத்தைக் கையளிப்பதற்குப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் பயன்படுத்தப்படும் பிரதான அணுகுமுறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

34. சமூகவகுப்பின் செல்வாக்கின்றி கல்வியில் சமவாய்ப்பைப் பாதுகாப்பதற்கு நிலவவேண்டுமென இனங்காணப்பட்டுள்ள தேவைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

35. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கலாசாரங்களுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சமூகத்துக்குப் பொருத்தமான கல்வி எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?

..........................................................................................

36. ஆசிரியர் வகிபாகத்திற்குரிய விரிவான பணிகள் தொடர்பாக கருத்துள்ள விதத்தில் வகுக்கப்பட்ட **இரண்டு** முக்கிய துறைகளைக் குறிப்பிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

37. வகிபாக விதிக்கு அமைய ஆசிரியர் வகிபாகத்துக்கு உரித்தான பிரதான முரண்பாடுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

38. இலங்கைச் சிறுவர்கள் கட்டாயமாகப் பாடசாலைகளுக்கு வருகை தருவது தொடர்பான கொள்கையை அமுல் செய்வதற்கென நிறுவப்பட வேண்டியதென 2016 ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட குழுக்கள் **இரண்டையும்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

39. 2016/1 இலக்க சுற்றுநிருபத்துக்கு அமைய, இலங்கைப் பாடசாலைகளில் பாடங்களுக்கு அமைவாக இருக்கவேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும்போது, இரண்டாம் தேசிய மொழி எவ்வாறு வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது?

..........................................................................................

40. கல்வியை முதலீடாகக் கருதும், கல்வித் திட்டமிடல் அணுகுமுறைகள் **இரண்டைப்** பெயரிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

41. 1996 இல் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் பாடசாலை மேம்பாட்டுக்கென அறிமுகஞ் செய்யப்பட்ட, பன்முகப்படுத்தப்படல் உபாய முறை தொடர்பான எண்ணக்கரு மற்றும் குழு ஆகியவற்றை முறையே பெயரிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

42. பாடவேளைக்கு அல்லது பாடத்துக்கு மதிப்பீட்டுப் படிவங்களைத் தயாரிக்கும்போது அடிப்படையாகக் கருதப்பட வேண்டிய பிரதான காரணி யாது?

..........................................................................................

43. அறிவாட்சி **அல்லாத** ஆற்றல்கள் தொடர்பான மதிப்பீட்டு நுட்பங்கள் **இரண்டைப்** பெயரிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................



Department of Examinations, Sri Lanka

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE

44. வினாத்தாளொன்றில் குறிப்பிட்ட வினாவொன்று பரீட்சார்த்திகளுக்கு எவ்வளவு சுலபமானது அல்லது கடினமானது என்பதைக் கணிக்கப் பயன்படும் சுட்டியின் பெயர் யாது?

..........................................................................................

45. ஆசிரியர் பயிற்சியொன்றின்போது ஆசிரியரிடம் காணப்பட வேண்டிய திறனொன்றை, சிறுகுழுக்களாக்கி குறுகிய காலத்தில் அபிவிருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள கற்பித்தல் முறையைப் பெயரிடுக.

..........................................................................................

46. பீ.எச்.ஸ்கினரின் "தூண்டல் துலங்கல் விதி" எனும் உளவியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள சுய கற்றல் முறையை பெயரிடுக.

..........................................................................................

47. பாடம் ஒன்றுக்கான கட்புல செவிப்புல துணைச்சாதனங்களைத் தெரிவுசெய்யும் போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கிய கோட்பாடு யாது?

..........................................................................................

48. எந்தவொரு தாளிலுமுள்ள எழுத்துவடிவிலான விடயங்களையும் படங்களையும் வர்ணங்களுடன் பெருப்பித்துக் காட்டக்கூடிய நவீன தொழினுட்ப உபகரணம் யாது?

..........................................................................................

49. ஆராய்ச்சியொன்றின்போது திரட்டப்பட்ட தரவுகளின் தன்மைக்கேற்ப பெயரிடப்பட்ட **இரண்டு** வகையான ஆராய்ச்சிகளின் பெயர் குறிப்பிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

50. கல்வி ஆராய்ச்சிசார்ந்த பிரச்சினையுடன் தொடர்பான அனைத்துத் தரப்பினரையும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படும் குழுவினரையும் ஒழுங்குமுறையில் பெயரிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

* * *

Department of Examinations, Sri Lanka